**வடக்கில் மீளக்குடியேற்றப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரங்கள் மீளமைப்பதற்கான மோதல்களிற்கு பிந்திய அவசர உதவிச் செயற்திட்டம் - 2013**

வடக்கில் மீளக்குடியேற்றப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரங்கள் மீளமைப்பதற்கான மோதல்களிற்குப் பிந்திய அவசர உதவிச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையில் 2010 செப்தெம்பர் 27 ஆந் திகதியில் கைசாத்திடப்பட்ட ஜேஎவ்பிஆர்-9150-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 11(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

மானிய உடன்படிக்கையின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளனர். தற்காலிக வருமானம் உழைக்கும் சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்வதன் ஊடாக வடக்கில் மீளக்குடியேற்றப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் (ஐடிபீ) வாழ்வாதாரங்களை மீளமைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 2.79 மில்லியனானதுடன அதில் ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் அல்லது மொத்தக் கிரயத்தில் 89 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகையான ஐ.அ.டொலர் 0.15 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 0.14 மில்லியன் முறையே இலங்கை அரசாங்கம் மற்றும் செயற்திட்ட சமுதாயத்தால் பங்களிப்பு செய்யப்படும். செயற்திட்டத்தின் தொடக்க வேலைகள் 2010 ஒக்தோபர் 26 ஆந் திகதி ஆரப்பிக்கப்பட்டதுடன் செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 மே 01 இல் தொடங்கியிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 ஏப்ரல் 25 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட முடிவுத்திகதி 2014 பெப்ரவரி 28 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

கூறு ஏ: வெளிக்கள நீர்ப்பாசன வாய்க்கால்கள் மற்றும் கிராமிய நுழைவு வீதிகளின் புனரமைப்பும் பராமரிப்பும்.

கூறு பீ: சுய வேலைவாய்பிற்கான தொழில் திறன் அபிவிருத்தி மற்றும் விவசாய உற்பத்தித்திறன் முன்னேற்றம்.

கூறு சீ: செயற்திட்ட நிர்வாகம், அமுலாக்கல் ஆதரவு, மேற்பார்வை மற்றும் கணக்காய்வு.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும்

அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கொடையளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்ததா என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(உ) மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4. நிதிக் கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 148,175,255 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 297,370,880 ஆகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 79,243,900 | 125,549,800 | 205,208,400 |
| உபகரணங்கள், உலோகப் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் | 43,650,405 | 8,294,715 | 52,420,479 |
| தொழில் திறன் பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் பொதுமக்கள் பிரச்சாரம் | 8,095,652 | 59,625 | 9,097,929 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 17,185,298 | 8,943,310 | 30,644,072 |
| | 148,175,255 | 142,847,450 | 297,370,880 |

**4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அந்த கணக்கில் இருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இவ் உள்ளவாறான மீதி | 83,685.67 | 10,641,537 |
| கூட்டு:- | | |
| மீள்நிரப்பல்கள் | 1,109,279.67 | 143,826,211 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 321,370 |
| | 1,192,965.34 | 154,789,118 |
| கழி: பற்றுதல்கள் | 1,048,198.42 | 135,860,409 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 144,766.92 | 18,928,709 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடு

2011 யூலையிலிருந்து 2013 யூன் வரையான காலத்திற்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு தவறாக கணகிப்பிடப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 395,432 தொகை அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

### 5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 நவம்பர் முதல் 2013 ஏப்ரல் வரையான காலத்திற்காக செயற்திட்டத்தின் மூன்று உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து வரி கழிக்கப்பட்டிருக்க வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 யூலையில் விபத்துக்குள்ளாகியயிருந்த மன்னர் மாவட்ட செயற்திட்ட அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட மோட்டார் வாகானத்திறகு ஏற்பட்ட சேதங்கள் மீது நிதிப்பிரமாணம் 104(2) இன் பிரகாரமான அறிக்கை 2014 மார்ச் 31 வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்களின் பெறுகைகளிற்கு எதிராக தவறாக ரூபா 10,220 கூட்டு மொத்தத் தொகையான உள்ளூர் வரிகள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 05 மாவட்ட அலுவலகங்களில் நடைமுறையல்லாத சொத்துக்களில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பாவனை மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப் பட்ட தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) | ரூபா. (மில்) | ரூபா. (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 2.50 | 320.90 | 1326.00 | 135.86 | 2.21 | 283.82 |
| இலங்கை அரசாங்கம் | 0.15 | 19.20 | 9.00 | 4.97 | 0.03 | 4.97 |
| மொத்தம் | 2.65 | 340.10 | 145.00 | 140.83 | 2.24 | 288.79 |

**6.2 செயலாற்றல் மீளாய்வு**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நிர்வாக விஞ்ஞாபனத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு இயலக்கூடியவாறு நடாத்தப்பட வேண்டிய மாதாந்த செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான இலக்குகளுடன் பிரதான பதவியிணியினரின் பொறுப்புக்களை இனங்காண்கின்ற செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டு ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஒட்டுமொத்தமான செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் கணக்காய்வில் முறைப்படி மதிப்பிட முடியாதிருந்தது.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வட மாகாணத்தின் 05 மாவட்டங்களில் செயற்திட்ட காலத்தின் போது புனரமைப்பு செய்யப்பட்ட 200 கிலோமீற்றர் கால்வாய்களில், 36.31 கிலோமீற்றர் பயிர்ச்செய்கை கால்வாய்களின் புனரமைப்பு வேலைகள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய கால்வாய்களின் 53.33 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாட்டில் உள்ளன. ஆகவே இருக்கின்ற செயற்திட்ட காலத்தின் போது 110.36 கிலோமீற்றர் கால்வாய்களின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(ஈ) 100 கிலோமீற்றர் கிராம நுழைவு வீதிகளின் முன்னேற்றம் செயற்திட்ட காலத்தின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வீதிகளின் 28.98 கிலோமீற்றர் வேலைகளின் முன்னேற்றம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டமானது அவற்றின் மீது நிதி ஏற்பாடுகள் எதுவும் இல்லாத போதிலும் அப்பகுதியில் மக்களின் உயர்ந்த கேள்வி காரணமாக ஏனைய வீதிகளின் 518.3 கிலோமீற்றர் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது தொடங்கப்பட்டிருக்காத நீர்ப்பாசன கால்வாய்களிற்காகஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி அதிகளவு நுழைவு வீதிகளை புனரமைத்திருந்தது என செயற்திட்ட பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார்.

(உ) உள்ளூரில் இடம்பெயர்ந்த குறைந்தது 2000 மக்களிற்காக சுய வேலைவாய்ப்பிற்காக தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,758 உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர்களிற்காக மாத்திரம் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விவசாய, விலங்கு வேளாண்மை, உடைவடிவமைத்தல் மற்றும் கணனிப் பயிற்சி என்பவற்றிற்காக பயிற்சி மாதிரிகள் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் அபிவிருத்தி செய்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**6.3. சொத்துக்கள் முகாமைத்துவம்**

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 3,962,941 பெறுமதியான நிலையான சொத்துக்கள் செயற்திட்டம் அதன் தொடக்கத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் திறைசேரி சுற்றறிக்கையின்

பிரகாரம், நிலையான சொத்துப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், 05 மாவட்ட கிளைகளில் நிலையான சொத்துக்களின் கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ஆ) யாழ்ப்பாண மாவட்டத்தில் வருடாந்த விலங்கு வேளாண்மை பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துவதற்கு 2013 யூலை 16 இல் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு ரூபா 500,000 தொகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், ரூபா 500,000 தொகை முற்பணம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் 2013 செப்தெம்பர் 11 இல் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 927,862 கூட்டு மொத்தத் தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு நிலுவைகளிற்கான மிகை அறவீட்டு கட்டணம் 2011 யூலை முதல் 2013 யூன் வரையான காலத்திற்காக செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

**6.4. மனிதவள முகாமைத்துவம்**

2007 ஏப்ரல் 05 ஆந்திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத 21 பதவிகளிற்காக உத்தியோகத்தர்களை செயற்திட்டம் வேலைக்கமர்த்தியிருந்தது. மேலும், 02 உத்தியோகத்தர்கள் சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் 2.2.8 ஆம் பந்தியிலுள்ள அறிவுறுத்தல்களிற்கு முரணாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.